**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 12/2025**

**வா.சா.1 – முத்து ரத்தினம்**

**<u>02–04–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி.</u>**

கீழ்கண்ட ஆவணங்கள் வாதி தரப்பில் குறியீடு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.7 | பாகசாசன பத்திரம் | சான்றிட்ட நகல் |
| 2. | வா.சா.ஆ.8 | எனது ஆதார் அடையாள அட்டை | அசலோடு ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது. |
| 3. | வா.சா.ஆ.9 | க.ச எண். 538ன் புல வரைபடம் | கணினி நகல் |

**<u>1, 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது தந்தை பெயர் பழனிச்சாமி என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் நாச்சிமுத்து கவுண்டர் என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டர், பழனிச்சாமி, நான் எனது சகோதரர் கடந்த 08.08.1995ம் தேதி எங்கள் குடும்ப சொத்துக்களை பாகபிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான். அதில் எனக்கு பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தம்பிக்கு சி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். க.ச. எண். 538/1ஏ காலையில் 3.76 ஏக்கர் உள்ளது என்றால் சரிதான். க.ச. எண். 538/2 காலையில் 4.20 ஏக்கர் உள்ளது என்றால் சரிதான். க.ச. எண். 538/1ஏ காலை வடபுறமும், 538/2 காலை தென்புறமும் உள்ளது என்றால் சரிதான்.

2. தென்புறம் உள்ள 4.20 ஏக்கர் பூமிக்கு தென்புறம் கிழமேல் பெருந்தொழுவு ரோடு உள்ளது என்றால் சரிதான். வடபுறம் உள்ள 3.76 பூமிக்கு வடபுறம் 3ம் பிரதிவாதி ராமசாமிக்கு பூமி உள்ளது என்றால் சரிதான். 1995ம் ஆண்டு பாகபிரிவினைக்கு முன்பு 10.11.1986ல் வா.சா.ஆ.2 ஆவணப்படி மேற்படி பூமிகளுக்கு கிழபுறம் 3ம் பிரதிவாதி பூமிக்கு போவதற்காக எனது தகப்பனார் பழனிச்சாமி மேற்படி 538/1ஏ மற்றும் 538/2 காலைகளில் கிழகோட்டில் தென்வடலாக 19 செண்ட் பூமியை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் 19 செண்ட் பூமியை கிரையம் கொடுத்தார் ஆனால், 2பி வாய்க்காலுக்கு

வடக்கே தான் கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி கிரைய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன். அதில் வாய்க்காலுக்கு வடபுறம் கிரையம் கொடுத்தாக குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரியல்ல எழுதப்பட்டுள்ளது.

3. 1995 பாகப்பிரிவினை பத்திரப்படி 538/1ஏ காலையில் 3.76 ஏக்கரில் செக்குபந்தி கண்டு மேல்புறம் எனக்கு 1.88 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தென்புறம் உள்ள 538/2ல் உள்ள 4.20 ஏக்கரில் மேல்புறம் 2.10 ஏக்கர் எனக்கு செங்ககுபந்தி கண்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரவிசந்திரனுக்கு 3.76 ஏக்கரில் கிழபுறம் 1.88 ஏக்கர் செக்குபந்தி கண்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4.20 ஏக்கரில் கிழபுறம் 2.10 ஏக்கர் செக்குபந்தி கண்டு அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகசாசனப்பத்திரப்படி மேல்புறம் எனக்கும் கீழ்புறம் ரவிச்சந்திரனுக்கும் பூமிகள் உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும் வா.சா.ஆ.7 பாகப்பிரிவினை பத்திரப்படி மேல்புறம் எனக்கும் கீழ்புறம் ரவிச்சந்திரனுக்கும் பூமிகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. ரவிச்சந்திரன் பூமியில் தென்புறத்தில் கொஞ்சம் இடம் விட்டு பி.எ.பி வாய்க்கால் மேற்கே வந்து எனது பங்கு பூமிக்கு வடக்கே திரும்புகிறது என்றால் சரிதான். பி.எ.பி. வாய்க்கால் வந்தபிறகு உட்பிரிவுகள் மாறியுள்ளது என்றால் சரிதான். பி.எ.பி வாய்க்கால் எண். க.ச.எண். 538/2பி உட்பிரிவில் உள்ளது என்றால் சரிதான். ரவிச்சந்திரன் பங்கு பூமியில் தென்புறத்தில் விடப்பட்டுள்ள அந்த கொஞ்ச இடம் தான் என்னுடையது என்று வழக்காடுகிறேன் என்றால் சரிதான். பத்திரத்தில் மேல்புறம் எனக்கு 2.10 ஏக்கர் ஒதுக்கப்பட்டது மட்டும்தான் எனக்கு பாத்தியப்பட்டது என்றும், கிழபுறம் எனக்கு பூமி இல்லை என்றால் சரியல்ல. கிழபுறம் உள்ள பூமியையும் சேர்த்தால்தான் 2.10 ஏக்கர் பூமி வருகிறது. பி.எ.பி வாக்காலுக்கு தென்புறம் உள்ள மேற்படி இடம் 538/2டி1 மற்றும் 538/2டி2 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது. 538/2டி1 எனது சொத்திற்கு ஒட்டி உள்ள தென்புற பகுதி என்றால் சரியல்ல. முழுவதும் எனது சொத்துதான். 538/2டி2 ரவிச்சந்திரனின் கிழபுற பங்கிற்கு தென்புறம் உள்ள சின்ன பகுதி என்றால் சரியல்ல.

5. 538/2டி1 ன் பட்டா என் பெயரிலும் 538/2டி2 பட்டா ரவிச்சந்திரன் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. உட்பிரிவிற்கு எதிராக மேல்முறையீடு செய்தேனா என்றால் மேல்முறையீடு செய்தேன். அது தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரியல்ல, விசாரணை நடந்துகொண்டு உள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் விசாரணை நிலுவையில் உள்ளது. அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ரவிச்சந்திரன் பங்கை 1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் சேர்ந்து மேற்படி சொத்தை மனையிடமாக பிரித்துள்ளார்கள் என்றால் தெரியாது. மனையிடமாக பிரித்துள்ளதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனையிடங்களாக பிரித்ததில் பெருந்தொழுவு ரோட்டில் இருந்து பி.எ.பி வாக்காலுக்கு பாலம் போட்டு பெருந்தொழுவு ரோட்டில் இருந்து வடக்கு லேஅவுட் ரோடு அமைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

6. மேற்படி விபரத்தை எனது வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி லேஅவுட் ரோடு மற்றும் மற்ற லேஅவுட்டு ரோடுகளை 4ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ரவிச்சந்திரன் பங்கில் கிழக்கொட்டில் இந்த தடம் செல்கிறது என்றால் சரிதான். எனது தந்தையிடம் பிரதிவாதிகள் 19 செண்ட் கிரையம் பெற்றதையும், ரவிச்சந்திரன் பங்கை கிரையம் பெற்றதையும் சேர்த்து பிரதிவாதிகள் லேஅவுட் ரோடு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 3.43 சதுர மீட்டர் இடத்தை ஆக்கிரமித்து எனது இடத்தில் லேஅவுட் ரோடு போட்டுள்ளதாக வழக்குரையில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 538/2டி2 காலையில் எனக்கு உரிமையோ சுவாதீனமோ இல்லை என்றால் சரியல்ல.

7. ரவிச்சந்திரன் பங்கிற்கு பெருந்தொழுவு ரோட்டில் இருந்து தான் வடக்கே அவரது பூமிக்கு செல்லமுடியும் என்றால் சரியல்ல. எனது பூமிக்கு பெருந்தொழுவு ரோட்டில் இருந்து தான் செல்லமுடியும் என்றால் சரிதான். ரவிச்சந்திரன் பங்கிற்கு செல்வதற்கு பெருந்தொழுவு ரோட்டில் உள்ள தடத்தைத் தவிற வேறு தடம் இல்லை என்றால் சரியல்ல, பி.எ.பி வாய்க்காலின் வடபுறம் தான் தடம் உள்ளது தெற்கே இல்லை. வடபுறம் உள்ள தடத்திற்கு ரோட்டில் இருந்து செல்லவேண்டும் என்றால் வாக்காலையும், தடத்தையும் தாண்டிதான் சொல்லவேண்டும் என்றால் சரியல்ல. வாக்காலுக்கு தற்போது பாலம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆகையால் பாலம் கட்டப்பட்டுள்ளதால் பெருந்தொழுவு ரோட்டில் இருந்து மனையிடம் பிரிக்கப்பட்ட இடத்திற்கு செல்வதற்கு பாலம் வழியாகதான் சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. ரவிச்சந்திரன் பூமிக்கு பொருந்தொழுவு ரோட்டில் இருந்து செல்லும் தடத்தைத் தவிர வேறு தடம் இல்லை என்றால் சரியல்ல.

8. எனது குடும்பத்தில் அத்தைகள் மேற்படி பாகம் செல்லாது என்று பிரதிவாதிகளையும் சேர்த்து வழக்கு நடத்துகிறார்கள் என்றால் சரிதான். அதேபோல் எனது அத்தையின் மகள் பாப்பாத்தி தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கு உயர் நீதிமனறத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல, நடந்து வருகிறது. அதிலும் பிரதிவாதிகள் தரப்பினராக உள்ளார்கள் என்றால் சரிதான். ரவிச்சந்திரனுக்கு ஒதுக்கப்பட்ட பூமியை அவரது மனைவிக்கு அவர் செட்டில்மெண்ட் எழுதிவைத்த பிறகு செல்வகணபதி ஸ்பின்னர்ஸ் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அவர் சொத்தை கிரையம் வாங்கும் போது சரியான விஸ்தீரணம் குறிப்பிட்டு கிரையம் வாங்கிவிட்டு , 1, 2 பிரிதவாதிரகளுக்கு கிரையம் செய்து கொடுக்கும்போது எனது சொத்தையும் சேர்த்து கிரையம் செய்து கொடுத்துவிட்டார். செல்வகணபதி ஸ்பின்னர்ஸ் மீது வழக்கு சொத்தை கிரையம் வாங்கியது தவறு என்று அ.வ. 72/2022 வழக்கை இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அவ்வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரியல்ல, நடந்து வருகிறது.

9. நான் சொல்வது தவறு என்றும் வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரியல்ல. 1995 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினைப்படி முறையான ஆவணங்கள் அடிப்படையில் பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், மாற்றி மாற்றி எங்கள் குடும்பத்திற்குள் அக்கிரம லாபம் அடைவேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் அவர்களுக்கு உரிமை உள்ள சொத்தில் 3ம் பிரதிவாதிகளுடன் சேர்ந்து அங்கீகாரம் பெற்று லேஅவுட் அமைத்து, அரசுக்கு பொது இடங்களை தானம் கொடுத்து, மனைகளை விற்பனை செய்து வரும் நேரத்தில் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால் சொத்தில் உரிமை உள்ளது என்று கோரவும், தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்று கோரவும் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

10. எனக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்பதால் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யகோர என்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதேபோல் 1, 2 பிரதிவாதிகளின் 06.06.2022 கிரைய பத்திரத்தை ரத்துசெய்யகோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. லேஅவுட் அமைப்பதை தடுத்தால் பணம் கிடைக்கு என்ற நோக்கத்தில் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது இடத்தில் 60 செண்டை எடுத்துவிட்டார்கள். மேற்படி விபரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், நான் அவ்வாறு பிராதில் சொல்லவில்லை என்றும், எனக்கு கிழபுற பங்கில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

(3ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி 1, 2 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்கிறார்)

1. எனது அப்பா 3 பிரதிவாதிக்கு 19 செண்ட் இடத்தை தடத்திற்காக கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது பி.எ.பி வாய்க்காலுக்கு வடக்கே தான் உள்ளது, தெற்கே எனது பூமி உள்ளது. அவ்வாறு நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. கிரையம் கொடுத்த இடத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

<u>4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. தாவா தடம் 35 அடி அகலம் உள்ளது என்றால் சரியல்ல, 16 அடிதான் உள்ளது. 1 முதல் 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்த பத்திரத்திரல் 32 அடி என்று குறிப்பிட்டு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எவ்வளவு அடி தடம் என்றால் 16 அடி. லேஅவுட் பிளானை பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் லேஅவுட் பிளானில் 10 மீட்டர் தடத்தை தான் 4ம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் என்னுடைய இடத்தை சேர்த்துதான் எழுதி கொடுத்துள்ளார்கள். வரைபடத்தில் உள்ள அனைத்தும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் இடம் என்றால் சரியல்ல, அதில் 60 செண்ட் எனக்கு உள்ளது. உட்பிரிவை ரத்து செய்ய நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அவ்வாறு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சுவாதீனம் இல்லா இடத்திற்கு உறுத்துக்கட்டளை கோருகிறேன் என்றால் சரியல்ல.

2. மனை இடத்தில் அலுவலகம் உள்ளது என்றால் தெரியாது. வழக்கு சொத்தை பற்றியும் மனை இடத்தைப்பற்றியும் எனக்கு எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோராததால் அவருக்கு எதிராக வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.04.02 16:46:08 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.